# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 352/2016/பே–2

ஆணை எண்: 181/2017

நாள்: 07/07/2017

திரு. K. சின்னதுரை, B.A.,
5வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
மற்றும் 8 முன்னாள் உறுப்பினர்கள்,
வத்தலக்குண்டு பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

திரு. எம். ஏ. பீர்முகம்மது,
வத்தலக்குண்டு பேரூராட்சி மன்ற,
முன்னாள் துணைத் தலைவர்,
வத்தலக்குண்டு,
திண்டுக்கல் மாவட்டம். – எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு பேரூராட்சி முன்னாள் மன்ற உறுப்பினர் திரு. K. சின்னதுரை என்பவரின் 15.2.2016 நாளிட்ட முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதம் ந.க.எண்.2105/2016/இ2, நாள்:20.4.2016-ன் வாயிலாக இம்முறைமன்றத்திற்கு அனுப்பப்பட்டு 28.4.2016 அன்று பெறப்பட்டு 352/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு மற்றும் விசாரணை ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு பேரூராட்சியைச் சேர்ந்த திரு. K. சின்னதுரை, 5வது வார்டு முன்னாள் உறுப்பினர் மற்றும் 2,4,8,7,11,12,15, 17-வது வார்டு முன்னாள் உறுப்பினர்கள் முறையீட்டு மனுவில் கீழ்க்கண்டவாறு புகார்களை தெரிவித்துள்ளார்கள்.

முறையீட்டு மனுதாரர்கள் தங்களது முறையீட்டு மனுவில் பேரூராட்சி மன்ற கூட்டம் 15.2.2016 அன்று நடைபெறும் கூட்டத்திற்கு அஜந்தா 15.2.2016 தேதி 11.00 மணியளவில் சார்பு செய்யப்பட்டது என்றும் 18-வது வார்டு உறுப்பினர் திருமதி. என். ஜெயந்தி, மன்ற கூட்டத்திற்கு வரவில்லை என்றும், ஆனால் வந்ததாக தெரிவிக்கப்பட்டது என்றும் பொருள் மீது விவாதிக்காமல் அனைத்து பொருள்களும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது ஏன் என்று கேட்டதற்கு மன்ற துணைத் தலைவர் கொலை செய்து விடுவேன் என்று மிரட்டிவிட்டு கூட்டம் நடத்தாமல் மன்றத்தை விட்டு அனைவரையும் செயல் அலுவலரைவிட்டு வெளியேற்றிவிட்டார்கள். மேலும் மன்ற கூட்டம் நடத்தாமல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக கூறுவது தவறு என்றும், கூட்டத்தை ரத்து செய்யவும் மற்றும் வரும் கூட்டத்தினை பாதுகாப்பு கருதி மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடத்தவும் கோரியுள்ளார்.

இப்புகார் மனு மீது முறைமன்ற நடுவ அழைப்பாணை வாயிலாக 23.2.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. 11.1.2017 நாளிட்ட அறிவிப்பாணை வாயிலாக வத்தலகுண்டு செயல் அலுவலரின் விளக்க அறிக்கை கோரி பெறப்பட்டது. வத்தலக்குண்டு பேரூராட்சி செயல் அலுவலர் தனது 1.2.2017 நாளிட்ட விளக்க அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை சமர்ப்பித்துள்ளார்.

"பேரூராட்சியில் 15.2.2016 தேதியில் மன்ற சாதாரணக் கூட்டம் நடத்த 14 கூட்டப் பொருள்கள் மன்ற தலைவர் ஒப்புதலுடன் 18 வார்டு உறுப்பினர்களுக்கும் 11.2.2016ம் தேதியில் சார்பு செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மன்றக்கூட்டம் 15.2.2016ம் தேதி காலை 11.00 மணிக்கு தலைவர் அவர்கள் தலைமையில் கூட்டம் தொடங்கப்பட்டது. இக்கூட்டத்தில் திருமதி. பா. சுசித்திரா, தலைவர், திரு. எம். ஷபீர் முகம்மது, துணைத் தலைவர், திரு. எ. நாகூர்கனி, 1வது வார்டு, திருமதி. எஸ்.ஜான்சிராணி, 3வது வார்டு, திரு. ஒ. இளங்கோவன், 6வது வார்டு, திருமதி. சி. கற்பகம், 9வது வார்டு, திரு. எஸ். ஹபிப்ராஜா, 13வது வார்டு, திரு. எம். வி. எம். பாண்டியன், 14வது வார்டு, திரு. எம். ராமகிருஷ்ணம்மாள், 16வது வார்டு மற்றும் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள 18வது வார்டு உறுப்பினர் திருமதி. என். ஜெயந்தி உட்பட மன்ற தலைவருக்கு ஆதாரவான 10 உறுப்பினர்கள் மற்றும் திரு. கே. சின்னத்துரை, 5வது வார்டு, திரு. வீ. இருளப்பன், 4வது வார்டு,

திரு. அகிலன், 17வது வார்டு ஆகிய மூன்று உறுப்பினர்களையும் சேர்த்து மொத்தம் 13 உறுப்பினர்கள் மன்ற கூட்ட அரங்கிற்கு வருகை தந்து வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்தனர். ஏனைய திரு. வீ. மருதன் 2வது வார்டு, திருமதி. எம். ஷியாமளா 7வது வார்டு, திரு. சரவணக்குமார் 8வது வார்டு, திரு. தர்மலிங்கம் 11வது வார்டு, திருமதி. பஞ்சவர்ணம் 12வது வார்டு, திரு. என். துரைப்பாண்டியன் 15வது வார்டு ஆகிய 6 உறுப்பினர்கள் மன்ற கூட்ட அரங்கிற்கு வருகை தந்து வருகை பதிவேட்டில் கையொப்பமிட மறுத்து விட்டனர். இந்நிலையில் கூட்டம் நடத்துவதற்கு போதுமான அறுதி பெரும்பான்மை வருகை பதிவு இருந்ததால் மன்ற கூட்ட தலைவர் அவர்களால் கூட்டம் துவங்கப்பட்டது.

மன்ற கூட்டம் துவங்கிய நிலையில் திருமதி. என். ஜெயந்தி, 18வது வார்டு உறுப்பினர் தனது உடல்நிலை காரணமாக பேரூராட்சி மன்ற தலைவரின் அனுமதி பெற்று வெளியே சென்றார். இந்த சமயத்தில் விவாதப் பொருட்களை வாசிக்க விடாமலும், கூட்டத்தை நடத்தக்கூடாது என்றும் திரு. வீ. மருதன் 2வது வார்டு, திரு. வீ. இருளப்பன், 4வது வார்டு, திரு. கே. சின்னத்துரை, 5வது வார்டு, திருமதி. எம். ஷியாமளா 7வது வார்டு, திரு. சரவணக்குமார் 8வது வார்டு, திரு. தர்மலிங்கம் 11வது வார்டு, திருமதி. பஞ்சவர்ணம் 12வது வார்டு, திரு. என். துரைப்பாண்டியன் 15வது வார்டு, திரு. அகிலன், 17வது வார்டு ஆகிய 9 உறுப்பினர்களும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு கூட்டத்தை நடத்தவிடாமல் கலவரத்தில் ஈடுபட்டனர். இந்நிகழ்வின் போது 15வது வார்டு உறுப்பினர் திரு. என். துரைப்பாண்டியன் என்பவர் இவ்வலுவலக இளநிலை உதவியாளர் திரு. இரா. முரளிமோகன் கையில் இருந்த வருகை பதிவேட்டை பறித்து வருகை பதிவேட்டில் 15.12.2015ம் தேதிய வருகை பதிவேடு பக்கத்தை கிழித்தெறிந்து விட்டார். கிழித்தெறிந்தது குறித்து பேரூராட்சி மன்ற தலைவர் அவர்களால் வருகை பதிவேட்டில் எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மன்ற கூட்டத்தை நடத்த விடாமல் கலவரம் செய்த 9 உறுப்பினர்களையும் தலைவர் வெளியேறுமாறு ஆணையிட்டதைத் தொடர்ந்து, அவர்கள் வெளியேறிய பின் உடல் நலமில்லாமல் அனுமதியின் பெயரில் சென்ற 18வது வார்டு உறுப்பினர் திருமதி. என். ஜெயந்தி, வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்து மன்ற கூட்டத்தை விட்டு வெளியேறிய திரு. கே. சின்னத்துரை, 5வது வார்டு, திரு. வீ. இருளப்பன், 4வது வார்டு, திரு. அகிலன், 17வது வார்டு ஆகிய 4 உறுப்பினர்கள் நீங்கலாக ஏனைய 9 உறுப்பினர்களுடன் மன்ற கூட்டம் நடத்தப்பட்டு அனைத்து பொருள்களுக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மன்ற கூட்ட தீர்மான பதிவேட்டில் தீர்மானங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது" என்று செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகாமலும் புகார் மனுவிற்குரிய விளக்கத்தினை ஆதாரங்களுடன் சமர்ப்பிக்க முன்வராத நிலையில் அனைத்தும் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு செயல் அலுவலரின் விளக்க அறிக்கையினை ஏற்று மனுதாரரின்

புகார் மனுவினை நிராகரிக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 7-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//—
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 12/7/17

பெறுநர்

1. திரு. K. சின்னதுரை, B.A.,
5வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
வத்தலக்குண்டு பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

2. திரு. எம். ஏ. பீர்முகம்மது,
முன்னாள் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர்,
வத்தலக்குண்டு பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

3. செயல் அலுவலர்,
வத்தலக்குண்டு பேரூராட்சி
திண்டுக்கல் மாவட்டம்.